புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
ISSN : 2456-821X
Peer-Reviewed
UGC CARE LIST
UGC Care Listed Journal [2023 onwards]
Sacred Heart Research Publication, Sacred Heart College, Tirupattur-635601, Tamilnadu, India
Volume : 07, Issue : 01/02 - March 2023

# கம்பராமாயணத்தில் வள்ளல்கள்

**கட்டுரையாளர்**
*முனைவர் க. மங்கையர்க்கரசி உதவிப்பேராசிரியர்,*
*தமிழ்த்துறை,*
*அகர்சந்த் மான்மல் ஜெயின் கல்லூரி (சுழல்-II)*
*மீனம்பாக்கம், சென்னை.*

*முன்னுரை*

*ஒருவரின் தேவையைப் பூர்த்தி செய்பவர் தான் வள்ளல். வறியவர்களுக்கும், இல்லாதவர்களுக்கும் உதவவேண்டும். கொடுத்தே பழகிய கைகள், நிலை தளரினும் தம்மிடம் உள்ளதைப் பிறர்க்கு வழங்கத் தயங்காது ஈதலே சிறந்தது என்பதை உணர்ந்து, தம்மிடம் உள்ள எல்லாப் பொருள்களையும், மனமகிழ்ச்சியோடு கொடுக்கின்றவர்கள் வள்ளல்கள். கம்பருக்கு இராமாயணத்தை எழுதத் தூண்டியவர் சடையப்பவள்ளல்.அதற்கு நன்றிக் கடனாகக், கம்பர் தன் இராமாயணத்தில் ஆயிரம் பாடலுக்கு ஒரு முறை, சடையப்பவள்ளலின் பெருமையைப் பாடியுள்ளார். கம்பராமாயணத்தில் கம்பர், இராமனை, தசரதனை, சனகனை, கேகையனை இலட்சுமணனை, வாலியை, அனுமனை, இராவணனை சில இடங்களில் வள்ளல் என்று கூறியுள்ளார். கம்பர் கூறியுள்ள வள்ளல்கள் குறித்து ஆராய்வோம்.*

*வள்ளல் குணம்*

*வள்ளல் குணம் மிக்கவர்கள் தம் நிலையினின்று தாழ்ந்தாலும், அவர்தம் பண்பை இழக்க மாட்டார்கள். சேது அணை கட்டுகிறார்கள், அணை கட்டும் பொறுப்பாளன் நளன், வானர வீரர்கள் பெரிய குன்றுகளையும், மலைக் கற்களையும், பெயர்த்து எடுத்துக் கொணர்ந்து எட்ட நின்றபடி, நளனை நோக்கி வீசுகிறார்கள்.வீசிய குன்றுகளில் நிறைய மரங்கள் வளர்ந்திருந்தன. அவற்றில் பழங்கள் பழுத்திருந்தன. குன்றுகளை வீசிய வேகத்தில்,*

மரங்களின் பழங்கள் நீரில் விழுந்தன, காய்கள் விழுந்தன. மலர்களிலிருந்து தேன் துளிகள் சிதறின. விழுந்த இவை யாவும் அங்கு உலாவிய மீன்களுக்கு உணவாயின. வள்ளல் தன்மை மிக்க பெரியவர்கள் தம் நிலை பெயர்ந்தாலும் தாம் வழங்கும் பண்பைக் கைவிட மாட்டார்கள். 'கொடை என்பது பிறவிக் குணம்'. இந்த உண்மையைக் கம்பர் ஒப்பிட்டு உவமையாக்கி உளங்கனியப் பாடுகிறார். கொடுத்தே பழகிய கைகள், நிலை தளரினும் தம்மிடம் உள்ளதைப் பிறர்க்கு வழங்கத் தயங்காது. மரங்கள் அடிபெயர்ந்து விழுந்த போதும் காய், கனி, பூ, தேன் என மீன்களுக்குத் தந்தன.

“தேம் முதல் கனியும் காயும், தேனினோடு ஊனும், தெய்வப்
பூ முதலாய எல்லாம், மீன் கொளப் பொலிந்த அன்றே;
மாமுதல் தருவோடு ஓங்கும் வானுயர் மானக்குன்றம்
தாம் முதலோடும் கெட்டால் ஒழிவரோ? வண்மை தக்கோர்?”
(சேதுபந்தனப்படலம் 632)

வள்ளல் மேகம்

பெருமை மிகுந்த அந்த இமயமலை பொன்மயமாய் இருப்பதைப்பார்த்து, வானமானது வெள்ளிக் கம்பிகளை அதன்மேல் விழச் செய்ததைப்போல, மேகங்கள் தாரைகளை வழங்கின. ஈதலே சிறந்தது என்பதை உணர்ந்து, தம்மிடம் உள்ள எல்லாப் பொருள்களையும், மனமகிழ்ச்சியோடு கொடுக்கின்ற வள்ளல்களைப்போல அம்மேகங்கள் மழைத்தாரைகளை வழங்கின.

“உள்ளி உள்ள எலாம் உவந்து ஈயும் அவ்
வள்ளியோரின் வழங்கின மேகமே”
(ஆற்றுப்படலம் 16)

வள்ளல்-ஊற்றுநீர்

சந்திரசயில மலையில் அங்குள்ள தெளிந்த நீரை உடைய ஆறுகள், தமது வெள்ளமாகிய மிகுந்த நீர்ப்பெருக்கு முற்றிலும் வற்றிப்போகும்படி, முன்னரே மற்றவர்களுக்கு நீரை வழங்கிவிட்டது. நீரற்ற இப்போது, தோண்டுவதால் சுரக்கும் ஊற்றுநீரை, உறவினர் போல, மிகவும் விருப்பத்தோடு சிறிதளவாவது கொடுக்கின்ற-தம்மிடம் உள்ளதை இல்லையெனாமல் தருகின்ற வள்ளல்களை ஒத்திருந்தன.

“தெள்ளு புனல் ஆறு சிறிதே உதவுகின்ற
உள்ளது மாறாது உதவும் வள்ளலையும் ஒத்த”
(சந்திரசயிலப்படலம் 784)

வள்ளல் தசரதன்

அழியாத பெரும் புகழையுடைய தசரதன் என்னும் பெயர் கொண்ட வள்ளலாகிய அச்சக்கரவர்த்தி, தோலினால் அமைந்த உரையில் பொருந்தியுள்ள வாளை உடையவன். மன்னர்களுக்கு மன்னவன். ஆற்று நீர்ப் பெருக்கு, விலங்குகள், பறவைகள், விலை மகளிர்

உள்ளங்கள் ஆகிய இவற்றை என்றும் ஒரே வழியில் செல்ல செய்யும் வல்லமை உள்ளவன். வெள்ளமும், பறவையும் விளங்கும் வேசையர் உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன்.

"வெள்ளமும் பறவையும் விலங்கும் வேசையர்
உள்ளமும் ஒரு வழி ஓட நின்றவன்
தள்ள அரும் பெரும் புகழ்த் தயரதப் பெயர்
வள்ளல் வள்உறை அயில் மன்னர் மன்னனே"
(அரசியல் படலம் 174)

தசரதனை, கம்பர் வள்ளல் என்று குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது.

வள்ளல் இராமன்

வருணனை வழி வேண்டு படலத்தில் நீர்க்குரங்குகள், பாவிகளாகிய நாம் வள்ளலான இராமனைச் சாதாரண மனிதன் என்று எண்ணிக்கொண்டு இகழ்ந்து இக்கடலில் தங்கி விட்டோம். ஆராய்ச்சி இல்லாதவர்கள் ஆகிவிட்டோம் என வருந்தின.

"வள்ளலைப் பாவிகாள் மனிதன் என்று கொண்டு"
(வருணனை வழி வேண்டு படலம் 571)

உலாவியற் படலத்தில் இராமன் உலா வருதலைக் கண்ட ஒரு பெண், காதல் மிகுதியால் இராமனுடன்வரும் சேனையைக் காணாமல், இராமன் ஒருவனை மட்டுமே கண்டாள். அதனால் வள்ளலாகிய இராமன் தனித்துவருகிறானோ என்று கூறினாள்.

"மற்று ஒன்றும் காண்கிலாதாள் தமியனோ வள்ளல் என்றாள்"
(உலாவியற்படலம் 1022)

கடிமணப்படலத்தில் திருமணத்தைக் காண வந்த மண்ணவரும், விண்ணவரும் தம்மிடம் உள்ள பொருட்கள் எல்லாவற்றையும் வழங்கிவிட்டு, தாம் அணிந்துள்ள ஆபரணங்களையும், 'கொள்ளையாக முழுவதையும், எடுத்துக் கொள்க' எனக் கூறி, வரையாது வழங்கும் வள்ளல் போல, இராமனாகிய வள்ளலைப் பார்த்து செல்வியர். தம் மேனியில் அணிந்த ஆபரணங்கள் யாவும் (காதலால் தம் உடம்பு இளைக்க) தாமே கழன்று விழ நின்றார்கள்.

"வள்ளலை நோக்கிய மகளிர் மேனியின்"
(கடிமணப்படலம் 1182)

பெண் ஒருத்தி, இராமனை வள்ளல் என்று குறிப்பிடுகிறாள் என்பதை அறியமுடிகிறது.

கொலை செய்த கருணை வள்ளல்

மூலவதைப் படலத்தில் துன்பம் நீங்கிய தேவர், கையில் வாரிப் பொழிந்த மிகுந்த பழுது நீங்கிய தூய மலர்களும், சந்தனமும், போர்த் தொழிலில் விளைந்த வருத்தத்தைப் போக்க, அரக்கரைப் பெருங் கொலை செய்த கருணை வள்ளல், அந்த வாள் கொண்டு செய்யும்

*போர்க்களத்தை விட்டு, தம்பியான இலட்சுமணனோடு, இராவணன் எதிர் நின்ற போர்க்களத்தை நோக்கிப் போனான்.*

*''மா கொலை செய்த வள்ளல் வாள்அமர்க் களத்தைக் கைவிட்டு''*
*(மூலபல வதைப்படலம்3469)*

*கோசலை நாடுடை வள்ளல்*

*இராவணனுடன், இராமன் போர் செய்தபோது இராவணன் நிராயுதபாணியான நிலையில், ''இன்று போய் நாளை வா'' என்று இராமன் கூறினான்.*

*''நாளை வா என நல்கினன நாகு இளங்கமுகின்*
*வாளை தாவுறு கோசல நாடுடை வள்ளல்''*
*(முதற்போர்புரிபடலம் 1212)*

*கம்பர், இராமனை வள்ளல் என்று குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் ஜனகன்*

*வரையாது எதையும் வழங்கும் வள்ளலாகிய நம் அரசன் ஜனகன் இராமனுக்கு, சீதையைத் திருமணம் செய்விக்க விரும்பினான் என்றால், சீதையை ஏற்றுக் கொள் என்று கொடுத்து விட வேண்டும். அவ்வாறு செய்யாமல், கங்கையை தலையில் சூடிய சிவனது வில்லைக் கொண்டு வந்து, இச்சிறுவன் முன்னே நாண் ஏற்றுமாறு வைத்தது அறிவின்மையே என்பார் சிலர்.*

*''வள்ளல் மனத்தை மகிழ்ந்தனன் என்றால்*
*கொள் என முன்பு கொடுப்பதை அல்லால்*
*வெள்ளம் அணைத்தவன் வில்லை எடுத்து இப்*
*பிள்ளை முன் இட்டது பேதமை என்பார்''*
*(கார்முகப்படலம் 644)*

*மக்கள்,சனகனை வள்ளல் என்று குறிப்பிடுகிறார்கள் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் கேகயன்*

*தசரதன், கைகேயியிடம் வரையாது வழங்கும் கேகய மன்னன் மகளே, என் கண்களே வேண்டும் என்றாலும், அவற்றைக் கொடுக்கக் கடமைப்பட்டிருக்கிறேன். என் உடலில் பொருந்திய உயிரையும் நீ பெற விரும்பினாலும், அது இப்போதே உன் வசமாகும் என்றான்.(அவள் தந்தையான கேகைய மன்னனின் மகளே என்றழைத்தது. அவன் வள்ளல் தன்மையில் எள்ளளவும் கூட அவளிடம் இருக்காதா என்ற எதிர்பார்ப்பு தான்)*

*''கண்ணே வேண்டும் என்னினும் ஈயக் கடவேன் என்*
*உள் நேர் ஆவி வேண்டினும் இன்றே உனது அன்றோ*
*பெண்ணே வண்மைக் கேகையன் மானே பெறுவாயேல்''*

*(கைகேயி சூழ்வினைப்படலம் 209)*

*தசரதன், கேகையனை வள்ளல் என்று குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது.*

*இளைய வள்ளலே*

*கும்பகர்ணனுக்கும், இலட்சுமணனுக்கும் போர் நடைபெற்றது. வளைவு பொருந்திய வெண்மையான கோரப் பற்களைக் கொண்ட கும்பகர்ணன், பெரிய தேர் மீது நின்று போர் செய்யத் தொடங்கினான். அப்போது இலட்சுமணன் தரையிலிருந்து போரிடுவது சிறப்பாகாது என்று எண்ணிய அனுமன், இலட்சுமணனை அடைந்து, இளைய வள்ளலே என் தோள்மீது ஏறிக் கொள்க என்று கூறினான்.*

*"கிளை கொளாது இகல் என்று எண்ணி மாருதி கிடைத்தான்*
*இளைய வள்ளலே ஏறுதி தோள்மிசை என்றான்"*
*(கும்பகர்ணன் வதைப்படலம் 1442)*

*அனுமன், இலட்சுமணனை வள்ளல் என்று குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் ஆதிசேசன்*

*வள்ளல் குணம் பெற்ற ஆதிசேசன் என்னும் படுக்கையை உடைய திருமால் பள்ளி கொள்ளும் வெள்ளமான திருப்பாற்கடலைப் போல விளங்கும் கண்களையுடைய, அந்த நங்கை தனது மனத்தாமரையில் வந்து தங்கியிருக்கிறான்.*

*"வள்ளல் சேக்கை கரியவன் வைகுறும்*
*வெள்ளப் பாற்கடல்போல் மிளிர் கண்ணினாள்"*
*(மிதிலைக்காட்சிப்படலம் 569)*

*கம்பர்,வள்ளல் ஆதிசேசன் என்று குறிப்பிடுவதை அறியமுடிகிறது.*

*வள்ளல் வாலி*

*சாவாமைக்குக் காரணமான அமிழ்தமே வேண்டும் என்றாலும், அதைத் தருபவனே, அமுதத்தையும் தனக்கென வைத்துக் கொள்ளாமல், தேவர்களுக்கே வாரி வழங்கிய வள்ளலே, அம்பை மறைந்து நின்று உன் மேல் செலுத்துவதற்கு உடன்பட்டு வந்த இராமன், தனக்கு வேண்டியது இது வாலியே கொடுப்பாயாக என்று உன்னை கேட்பானாயின், உன் செல்வ வாழ்க்கை எல்லாம் உன் தம்பி சுக்ரீவனுக்கு அளித்திருப்பாயே என்று, தாரை இறந்த கணவன் வாலியிடம் புலம்புகிறாள்.*

*"ஓயா வாளி ஒளித்து நின்று எய்வான்*
*ஏயா வந்த இராமன் என்றுளான்*
*வாயால் ஏயினன் என்னின் வாழ்வுஎலாம்*
*ஈயாயோ அமிழ்தேயும் ஈகுவாய்"*

*(வாலி வதைப்படலம் 398)*

*தாரை, வாலியை வள்ளல் என்று குறிப்பிடுகிறாள் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் குகன்*

*இராம,இராவண யுத்தம் முடிந்தப் பிறகு இராமன், குகனைச் சந்தித்தபோது, தன்னை வணங்கிய குகனைப் பார்த்துப் பின்னர் தன் நண்பர்களான சுக்ரீவன் முதலியோரையும் நோக்கிப் பேசலானான். இவன் நிறைந்த நீருடைய கங்கையாற்றினைத் தழுவியுள்ள இரண்டு கரைகளுக்கும் தலைவன் ஆவான். அனைத்து உயிர்களிடத்தில் தாயைவிட அன்புடையவன், குகன் என்ற பெயரையுடைய 'வள்ளல் தன்மை உடையவன்' என்று கூறப்படுவான் ஆவான் என்றான்.*

*"தழுவு இரு கரைக்கும் நாதன் தாயினும் உயிர்க்கு நல்லான்*
*. வழுவு இலா எயினர் வேந்தர் குகன் எனும் வள்ளல்"*
*(மீட்சிப்படலம் 4191)*

*இராமன், குகனை வள்ளல் என்று குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் அனுமன்*

*அனுமனிடம், இராமன் அடையாள மோதிரத்தை கொடுத்து அனுப்பினார். அந்த மோதிரத்தை அனுமன் தர பெற்றுக் கொண்ட சீதை, அதனைப் போன உயிர் மீண்டும் பெற்றவர்கள் போலவும், இழந்த செல்வத்தைப் பெற்றவர்கள் போலவும், குழந்தை பெற்ற மலடி போலவும், ஆனந்த கடலில் மூழ்கி, மோதிரத்தைக் கையில் வாங்கி தன் மார்பில் வைத்தாள். தலை மீது வைத்தாள். கண்ணில் நீர் பெருகினால், வாய் திறந்து பேச வைத்தாள். ஆனால் பேச முடியாமல் போனது இராமனின் மோதிரத்தால், சீதையின் மேனியில் புதியதோர் பிரகாசம் ஏற்பட்டது. கண்ணீர் சிந்திய வண்ணம் உத்தமனே, 'நீ எனக்கு உயிர்த் தந்தாய். துணை இல்லாமல் இருந்த என் துன்பத்தைத் தீர்த்த வள்ளலே, நீ ஊழி காலமும் 14 உலகமும், அழியும் காலத்திலும் கூட இன்று போல் என்றும் இருப்பாயாக' என்று சீதை அனுமனை வாழ்த்தி வரம் அளித்தாள்.*

*''பாழிய பணைத்தோள் வீர துணை இலேன் பரிவு தீர்த்த*
*வாழிய வள்ளலே யான்மறுஇலா மனத்தேன் என்னின்*
*ஊழி ஓர் பகலாய் ஓதும் யாண்டுஎலாம் உலகம் ஏழும்*
*ஏழும் வீவுற்ற ஞான்றும் இன்றுஎன இருத்தி என்றாள்''*
*(உருக்காட்டுப்படலம் 559)*

*சீதை, அனுமனை வள்ளல் என்று குறிப்பிடுகிறாள் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் இராவணன்*

*சூர்ப்பணகை, இராவணனிடம் சொல்லும் இடத்தில் வள்ளலே, உனக்கு நல்லேன். மற்ற நின் மனையில் வாழும் கிள்ளை போல் ஒலியாருக்கெல்லாம் கேடு சொல்கிறேன் அன்றே என்கிறாள். வள்ளல் தன்மை கொண்டவனே, உனக்கு மட்டும் நான் நல்லவள். உன் மனதில் கிளியைப் போல, உரையாடும் உன் காதலிகளுக்கெல்லாம், நான் கேடு செய்தவள் ஆவேன் என்று கூறுகிறார்*

*"வள்ளலே உனக்கு நல்லேன் மற்று நின் மனையில் வாழும்*
*கிள்ளைபோல் மொழியார்க்கு எல்லாம் கேடு சூழ்கின்றேன் அன்றே"*
*(சூர்ப்பணகை சூழ்ச்சிப்படலம் 628)*

*சூர்ப்பணகை, இராவணனை வள்ளல் என்று குறிப்பிடுகிறாள் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் பிரம்மன்*

*நாகபாசத்தால் மயங்கி விழுந்தனர். கருடன் வரவால் அனைவரும் உயிர்ப் பெற்றனர். அறநெறியோடு கூடாத செயல்களையே செய்திருந்தலால், இடியைப் போன்ற, கருங்கண்களையுடைய, வஞ்சகர்களாகிய அரக்கர்களின் உடம்புகள் உயிர்ப்பெறவில்லை. மாறாக அறச் செயலில் ஈடுபட்டு நின்ற குரங்கு சேனை வெள்ளங்கள், உந்திக் கமலத்தில் தோன்றிய வள்ளலாகிய பிரம்மனால் ஊழி காலத்திற்குப்பின் படைக்கப்பட்டனபோல உயிருடன் எழுந்து நின்றன.*

*‘‘கருமத்தின் நின்ற கவி சேனை வெள்ளம்*
*மலர்மேல் அவ் வள்ளல் கடை நாள்’’*
*(நாகபாசப்படலம் 2208)*

*தாமரை மலரில் உள்ள வரமளிக்கும் வள்ளலாகிய பிரம்மனது குற்றமற்ற வரத்தினால், நீ அழிவில்லாத தருமத்தை மேற்கொண்டாய். அதனால் உலகம் உள்ளவரை வாழ்வாய். நீ எல்லா உலகத்திற்கும் தலைவன். எனவே இராமனை அடையும் செயல் உனக்கு ஏற்றதே. இங்கே இழிவான மரணத்தை அடைவது எனக்குப் புகழைத் தருவதேயாகும் என்று கும்பகர்ணன், வீடணனிடம் கூறினான்.*

*‘‘மலரின் மேல் இருந்த வள்ளல் வழு இலா வரத்தினால் நீ’’*
*(கும்பகர்ணன் வதைப் படலம் 1368)*

*கும்பகர்ணன், பிரம்மனை வள்ளல் என்று குறிப்பிடுகிறான் என்பதை அறியமுடிகிறது.*

*வள்ளல் சடாயு*

*சடாயுக் கண்ட இராமன், அதைப் பார்த்து கண்களில் இருந்த கண்ணீர் வர. தனக்கு ஒப்பற்ற உயிரைப் போன்ற தந்தையும், வள்ளல் தன்மையுடையவனுமான சடாயுவின் புனித*

உடல் மீது, நெருப்புப் போன்ற செந்நிற மேனியை உடைய சிவபெருமானது வெண்ணிறமான கயிலை மலை மீது, கருநிறமான மைமலை வந்து விழுந்ததைப்போல விழுந்தான்.

"வள்ளியோன் திருமேனியில் தழல் நிற வண்ணன்
வெள்ளி ஓங்கலில் அஞ்சன மலை என வீழ்ந்தான்"
(சடாயு உயிர் நீத்தப்படலம் 979)

சடையப்பவள்ளல்

கம்பரை ஆதரித்தவர் சடையப்பவள்ளல்ஆவார்.கொடியோனாகிய இந்திரசித் விடுத்த நாகபாசம் , வாசனை மிக்க தாமரை மலரின் தண்டிலுள்ள நூலின் தன்மை போல் மெலிந்தது எனக் கூறுவது எதற்கு? மேகமே என யாரும் கருதுவதற்குக் காரணமான கொடைத்தன்மை மிக்க வலிமையுடைய மேலோனாகிய சடையப்ப வள்ளலின் வெண்ணெய் நல்லூரை அடைந்த வேதியர்கள், சொல்வளம் மிகுந்த புலவர்கள் முதலியவர்களை வருத்திய பசி நீங்கியதுபோல, அந்நாகபாசம் உருத் தெரியாமல் விலகியது.

"ஆசங்கை கொண்ட கொடை மீளி அண்ணல்
சரராமன் வெண்ணெய் அணுகும்"
(நாகபாசப்படலம் 2206)

சடையப்பரை, கம்பர் வள்ளல் என்று குறிப்பிடுகிறார் என்பதை அறியமுடிகிறது.

முடிவுரை

வள்ளல் குணம் மிக்கவர்கள் தம் நிலையினின்று தாழ்ந்தாலும், அவர்தம் பண்பை இழக்க மாட்டார்கள். தம் நிலை பெயர்ந்தாலும் தாம் வழங்கும் பண்பைக் கைவிட மாட்டார்கள். 'கொடை என்பது பிறவிக் குணம்' கம்பருக்கு இராமாயணத்தை எழுதத் தூண்டியவர் சடையப்பவள்ளல்.தேவையானப் பொருளுதவி அளித்த வள்ளல். இராமனை, தசரதனை, சனகனை, கேகையனை இலட்சுமணனை, வாலியை, அனுமனை, இராவணனை,பிரம்மனை,சடாயுவை சில இடங்களில் வள்ளல் என்று கூறியுள்ளார் என்பதை அறியமுடிகிறது.

துணை நூற்பட்டியல்


1. இராமன் பன்முகநோக்கில், அ.ச.ஞானசம்பந்தன்,சாரு பதிப்பகம், சென்னை,2016.
2. காலமும் கணக்கும் நீத்த காரணன் கம்பன், கட்டுரைத் தொகுப்பு, (பதிப்பாளர்கள் பழ.பழனியப்பன், சொ.சேதுபதி) கபிலன் பதிப்பகம் ,புதுச்சேரி, சென்னை.
3. கம்பன் புதிய தேடல், அ.அ. ஞானசுந்தரத்தரசு,தமிழ்ச்சோலைப் பதிப்பகம், புதுக்கோட்டை, 2012.
4. எல்லைகள் நீத்த இராமகாதை,பழ.கருப்பையா,விஜயா பதிப்பகம், கோயம்புத்தூர், 2008.
5. கவிச்சக்கரவர்த்தி கம்பன் ஒரு பார்வை, தமிழ்நேசன்,வள்ளிபதிப்பகம், சென்னை,2019.
6. பூவண்ணன், கம்பராமாயணம் மூலமும் தெளிவுரையும் தொகுதி 1, 2, 3, 4, 5, 6,7, 8 வர்த்தமானன் வெளியீடு, சென்னை, 2011.
7. செல்வம்.கோ,கம்பன் புதையல், சாரு பதிப்பகம், சென்னை 2016.